பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 18 வியாழக்கிழமை 31.03.2022 கதிர் 15

## இலங்கைக்குப் படையெடுக்கின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்

கடந்த 29 நாள்களில் மட்டும் இலங்கைக்கு ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் 29ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகை தந்த 2

# யாழ்ப்பாணத்தின் 3 தீவுகளில் மின் உற்பத்தி; இந்திய நிதியுதவியை அதிகரிக்கத் தீர்மானம்



## அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் மூன்று தீவுகளில் மேற்கொள்ளப் படவுள்ள புதுப்பிக்கத்தக்க சக்தி மூலமான மின் உற்பத்தி திட்டத்துக்கு இந்தியா 75 வீத நிதியுதவியை வழங்கு கின்றது. அதனை 85 வீதம் வரை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

- இவ்வாறு மின்சக்தி அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின்கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட விருந்தது. எனினும், இந்தியாவிடம் இருந்து 75 வீத நிதிமானியமாக இந்தத் திட்டத்துக்குக் கிடைக்கின்றது - என்றார்.

# கூட்டமைப்பில் இருந்து ரெலோ வெளியேறினால் மிக சந்தோசம்!

## தமிழரசில் பலரின் எதிர்பார்ப்பு இது என்கிறார் சுமந்திரன்



**வவுனியா,மார்ச் 31**

**தமிழ் தேசியக்கூட்டமைப்பில் இருந்து ரெலோ வெளியேறினால் சந்தோசமாக இருக்கும். எமது கட்சியில் பலருக்கு நீண்ட கால எதிர்பார்ப்பே இவர்கள் எப்போது போவார்கள் என்பதே. - என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் ஊடக பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.** 2

## ஏப்ரல் 2ஆம் திகதி முதல் 4 மணிநேரமே மின்வெட்டு

ஏப்ரல் 2ஆம் திகதிக்குப் பிறகு மின்வெட்டு அமுலாகும் நேரத்தைக் குறைக்கக் கூடியதாக இருக்கும்.

- இவ்வாறு இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்தார். 2

## நாட்டில் ஜனாதிபதி மாளிகை உட்பட 191 இடங்களில் மின்வெட்டு இல்லை

இலங்கையில் 13 மணிநேரத்துக்கு மேல் மின்வெட்டு அமுலில் உள்ள நிலையில், ஜனாதிபதி மாளிகை மற்றும் நாடாளுமன்றத்துக்குத் தொடர்ச்சியாக மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றது. 2

## இணையத்தள சேவைகளும் பாதிப்பு

நாட்டில் தொடர்ச்சியாகப் பல மணித்தியாலங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்படும் நிலையில், தொலைபேசி சமிஞ்சைகளைப் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனத் தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.

மின்சாரம் துண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களில் சமிஞ்சைக் கோபுரங்களுக்கு மின்சாரத்தை 2

## மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த பிரேமலால் ஜயசேகர எம்.பி. விடுதலை



மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர (சொக்கா மல்லி) உள்ளிட்ட மூவரைக் குற்றமற்றவர்களாகக் கருதி விடுதலை செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் இரத்தினபுரியில் இடம்பெற்ற கூட்டமொன்றின்போது, துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் 2

## கோட்டாவின் பேஸ்புக் பக்கத்தில் Comment தெரிவிப்பதற்குத் தடை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அதிகாரபூர்வ முகநூல் பக்கத்தில், கருத்துத் (comment) பகுதியில் கருத்துத் தெரிவிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

'லைக்' மற்றும் 'செயார்' ஆகிய இரு தேர்வுகள் மட்டுமே தற்போது உள்ளன. நேற்றிரவு முதல் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முகநூல் பக்கத்தில் 10 இலட்சத்துக்கு மேற்பட்ட followers உள்ளனர். 2

## இந்திய மீனவர் மூவர் கைது



யாழ்ப்பாணம் காரைநகரை அண்மித்த கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்கள் எனக் கூறப்படும் இந்திய மீனவர்கள் மூவர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க வந்தவர்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மயிலிட்டி துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். 2

## திட்டமிட்டபடி பரீட்சைகள் நடைபெறும்

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

பரீட்சை வினாத்தாள்களை அச்சிடுவதற்கான கடதாசிகளுக்குத் தட்டுப்பாடு கிடையாது. எனவே, திட்டமிட்ட அடிப்படையில் பரீட்சைகள் நடத்தப்படும்.

- இவ்வாறு கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

பரீட்சை வினாத்தாள்களை அச்சிடுவதற்கான கடதாசிகளுக்குத் தட்டுப்பாடு இல்லை. மேலதிக கடதாசிகளை பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, பரீட்சைகள் பிற்போடப்ப டும் என வெளியாகும் தகவல்கள் ஏற்புடையவை அல்ல. திட்டமிட்ட அடிப்படையில் பரீட்சைகள் நடத்தப்படும். - என்றார்.

## தந்தை செல்வா பிறந்த தினம் யாழ் நகரில் இன்று அனுஷ்டிப்பு



(கலையமுதன்)

தந்தை செல்வாவின் 124 ஆவது பிறந்தநாள் நினைவு நிகழ்வு இன்றைய தினம் 2

# பிரபா ஏன் பயங்கரவாதியாக்கப்பட்டார்? தென்னிலங்கைவாசி யாழில் கவனவீர்ப்பு



## புலிகளின் தலைவரின் படம் தாங்கிய பதாகையுடன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை பயங்கரவாதியாக்கியது யார் என்பதனை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தான் வெளிப்படுத்துவார் எனக் கூறி பிரபாகரனின் படம் பொறிக்கப்பட்ட பதாகையுடன் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். 2

## மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவருக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பு தொடர்பில் பிரதிவாதிகள் சார்பில் பிரதி மேன்முறையீடு செய்யப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பான தீர்ப்பை இன்று அறிவித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் பிரதிவாதிகளான நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவரை நிரபராதிகளாகக் கருதி விடுவிக்குமாறு உத்தரவிட்டது.

இதற்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர, சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நிலந்த மற்றும் கஹவத்தை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வஜித தர்ஷன ஆகியோர் இவ்வாறு விடுக்கப்பட்டுள்ளனர்.

## கோட்டாவின் பேஸ்புக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்குத் தற்போதைய சூழ்நிலையில் கடும் எதிர்ப்பு வலுத்து வருகின்றது. 'கோ ஹோம் கோட்டா' என்ற பரப்புரையும் ஆரம்பமாகியுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் சமூக வலைத்தளங்கள் பயன்பாட்டுக்கு வந்த பிறகு, ஜனாதிபதி பதவியை வகித்த எவரும் இவ்வாறு தடைவிதிக்கவில்லைஎனச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தந்தை செல்வா பிறந்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இன்று காலை 9.30 மணியளவில் யாழ் மத்திய கல்லூரியில் உள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தந்தை செல்வாவின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் தலைமை அறங்காவலர் சா.செ.ச.இளங்கோவன், யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, மனித உரிமை செயற்பாட்டாளர் ஷ்ரீன் அப்துல் ஸரூர், இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எழில் வேந்தன், தமிழ்த் தேசிய கட்சியின் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இந்திய மீனவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை ஊர்காவற்துறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பிரபா ஏன் பயங்கரவாதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் சுப்பிரமணிய பூங்கா முன்றிலில் இன்று காலை முதல் இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் அவர் ஈடுபட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஏன் பயங்கரவாதி ஆக்கப்பட்டார், என்ன காரணத்திற்காக அவர் குற்றவாளி ஆக்கப்பட்டார், அவர் ஒரு சாதாரண மனிதனாக இருந்திருப்பார், ஆனால் இலங்கையில் இருந்த அரசியல் பின்னணி மற்றும் ஏதோ ஒரு சூழ்ச்சியின் காரணமாகவே அவர் பயங்கரவாதி என பெயர் குறிப்பிடப்படும் அளவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். இனியும் வடக்கிலிருந்து ஒரு பிரபாகரன் உருவாகும் நிலைமையினை நாங்கள் ஏற்படுத்தக்கூடாது. இனி பிறக்கும் குழந்தைக்கு நாங்கள் சயனைட் குப்பியை கொடுக்காது, வடக்கு – தெற்கு மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் எதிர்காலத்தில் மீண்டும் ஒரு பிரபாகரன் போன்றவர்களை நாங்கள் உருவாக்காது தடுக்க முடியும். – என தெரிவித்துள்ளார்.

## இணையத்தள ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்காக மின்பிறப்பிபாக்கிகளைப் பயன்படுத்துவதற்கு டீசல் இன்மையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என அமைச்சின் செயலாளர் ஜயந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, தொலைபேசி சமிஞ்சைக் கோபுரங்களின் செயற்பாடு தடைப்படுவதுடன், குறித்தவலயங்களில் இணையத்தள சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் இடையூறு ஏற்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதற்கமைய, அனைத்து தொலைபேசி சமிஞ்சைக் கோபுரங்களுக்கும் டீசலை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக விசேட மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டில் ஜனாதிபதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர வர்த்தக வலயங்கள், மின்சார நிலையங்களை அண்டிய பகுதிகள், கைத்தொழில் பேட்டைகள் உள்ளிட்ட நாட்டின் 191 இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் இந்த 191 இடங்களுக்கு மின்சாரத் தடையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மின்சாரக் கட்டணம் செலுத்தாத வாடிக்கையாளர்களின் மின் இணைப்பு துண்டிப்பு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## ஏப்ரல் 2ஆம் திகதி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ஊடக மையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டுகருத்துவெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 2ஆம் திகதி எமக்கு ஒரு தொகை டீசல் வருகின்றது. அந்த டீசல் மின்சார சபைக்கு வழங்கப்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதியளித்துள்ளது.

எனவே, 2ஆம் திகதிக்குப் பிறகு தற்போதைய நிலைமை ஓரளவுக்குச் சீராகும். மின்வெட்டை 4 மணிநேரம் வரை குறைக்கக்கூடியதாக இருக்கும்.

எரிபொருள் மற்றும் மழைவீழ்ச்சி கிடைத்தால் தொடர்ச்சியாக மின்சாரத்தை விநியோகிக்க முடியும் – என்றார்.

## கூட்டமைப்பில் இருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் தந்தை செல்வாவின் 124 ஆவது பிறந்தநாள் நிகழ்வின் பின்னர் தமிழரசுக்கட்சியின் 'தாயகம்' அலுவலகத்தில் இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் "கடந்த காலங்களில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டு தமிழரசுக்கட்சியை விமர்சித்து பின்னர் வெளியேறியது. அதேபோன்றதான நிலையில் தற்போது ரெலோ காணப்படுகின்றது. எனவே ரெலோவும் வெளியேறிவிடும் என்ற அச்சம் உங்களுக்கு உள்ளதா?" – என கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

ஏன் அவர்கள் வெளியேறிவிடுவார்கள் என்று அச்சமாக இருக்க வேண்டும்? அது சந்தோசமாகவும் இருக்கலாம் தானே. எமது கட்சியில் பலருக்கு நீண்ட காலமான எதிர்பார்ப்பு இவர்கள் எப்போது போவார்கள் என்பது. எனினும் நாங்கள் தமிழ் மக்களை பிரதிநிதிப்படுத்தும் கட்சிகளில் பிளவு இருக்க கூடாது, எல்லோரும் சேர்ந்து இயங்குவது எமது மக்களுக்கு பலமான விடயம் என்பதனால் நாங்கள் எல்லோருடனும் சேர்ந்து பயணிக்கின்றோம்.

இன்று அரசாங்கத்துடன் தமிழ் தரப்பு பேச்சு நடத்தும் சூழ்நிலையில் ரெலோ மட்டுமல்ல வெளியில் உள்ள ஈ.பி.ஆர்.எல.எவ்வாகட்டும், விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியாகட்டும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியாகட்டும் எல்லோரும் இதற்கு இணங்கி ஒன்றாக சேர்ந்து நாங்கள் எங்களுடைய நிலைப்பாட்டை அரசாங்கத்துக்கு முன் வைக்க வேண்டும் என்பதே எனது தாழ்மையான கோரிக்கை. தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் என்ற வகையிலும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளர் என்றவகையிலும் இந்த அழைப்பை விடுக்கின்றேன்.

நாங்கள் ஆயுதப்போராட்டத்தைக் கொச்சப்படுத்தவும் இல்லை. காட்டிக் கொடுக்கவும் இல்லை. ஆயுதப்போராட்டத்தினை நேரடியாகவே காட்டிக்கொடுத்தவர்கள் பலர் நேரடியாகவே கொலைகளைச்செய்துவிட்டு, இன்றுதாங்கள்தான் விடுதலைப் புலிகளின் பிரதான ஆதரவாளர்கள்போல் காட்டிக்கொண்டு திரிகின்றனர். அதில் மக்களுக்கு தெளிவு இருக்க வேண்டும்.

எனக்கு வன்முறையில் நம்பிக்கை இல்லை என்பது ஆயுதப்போராட்டத்திற்கு எதிரான கூற்று அல்ல. எனக்கு நம்பிக்கை இல்லை என்பதேதான். ஆனால் அந்த ஆயுதப்போராட்டம் நடந்த காலத்திலேயே அதனை முன்னின்று நடத்தியவர்களை, காட்டிக்கொடுத்து – ஆயுதத்தை இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக திருப்பாமல் தங்களுடைய சொந்த போராளிகளுக்கு எதிராக, சகோதர இயக்கங்களுக்கு எதிராக, திருப்பியவர்கள் இன்று தாம் விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக இயங்கியவர்களை போல பொய்யாக வேடம் போட்டு திரிகின்றனர். இதில் மக்கள் கவனமாக இருக்க வேண்டும்.

அண்மையில் எங்களோடு பேச்சுக்கு வரமாட்டோம் என பகிஷ்கரித்த இயக்கத்தின் தலைவர் சொல்லியிருந்தார், சிறிசபாரத்தினமும் பிரபாகரனும் இந்த சந்தர்ப்பத்தில்என்னசெய்திருப்பார்களோ அதனையே தாம் செய்தோம் என்று. பிரபாகரனும் சிறிசபாரத்தினமும் ஒன்றாக பயணித்தவர்கள் போல கூறியிருந்தார். ஆனால் தந்தை செல்வா இந்த சந்தர்ப்பத்தில் என்ன செய்திருப்பாரோ அதனையே நாம் செய்தோம். – எனத் தெரிவித்தார்.

## இலங்கைக்குப் படை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 101,192 என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குப் பிறகு ஒரே மாதத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்தமை இதுவே முதல் முறையாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, இவ்வருடம் (2022) இது வரை நாட்டுக்கு வந்துள்ள வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 80 ஆயிரத்து 26 ஆகும்.

இதேவேளை, இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த நாடு இந்தியாவாகும். அந்த எண்ணிக்கை 22 ஆயிரத்து 231 ஆகும்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## குற்றத்தை ஒப்புக்கொள்ளுங்கள்!

'தவறை ஒப்புக்கொள்ள மறுப்பதை விட பெரிய அவமானம் எதுவுமில்லை' – என்றார் மகாத்மா காந்தி.

நமது தலைவர்களுக்கு காந்திஜியின் இந்த வழிகாட்டல் புரிவதில்லை. அதனால் தவறை ஒப்புக்கொள்ளாத அறிவிலித்தனம்தான் அவர்களின் பொதுவான பண்பியல்பாக இருக்கின்றது. தவறுகளைத் திருத்திக்கொள்ள முடியாமைக்கான பிரதான காரணமாக இருப்பதும் அதுதான். ஐயாயிரம் குளக்கட்டுகளைப் புனரமைக்கும் இரண்டாம் கட்டப் பணிகளை நேற்று தமது அலரி மாளிகையில் இருந்தபடி ஆரம்பித்து வைத்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

குளத்தில் தண்ணீரைத் தேக்கி வைக்கும் நுட்பத்தில் தொடங்கி, விவசாயத் துறை மேம்பாடு வரை பல விடயங்கள் குறித்து நீண்ட உரை ஒன்றை அவர் அங்கு ஆற்றினார் என்று அவரது ஊடகப்பிரிவு தகவல் வெளியிட்டது.

விவசாயப் பொருளாதாரம் குறித்தும் உரையாற்றிய அவர், அதனைக் குறிப்பிட்ட கையோடு, பிற தரப்புகள் மீதும் குற்றச்சாட்டுப் பட்டியலை நீட்டி முழங்கினார்.

ஒரு விரல் எதிர்த்தரப்பை நோக்கிக் குற்றம் சுமத்தி நீளும் போது, அந்தக் கையின் மற்றைய மூன்று விரல்களும் குற்றம் சுமத்துபவரை நோக்கித் திரும்பி இருகின்றமையை அவர் மறந்து விட்டார் போலும்.

"புத்தாண்டுக் காலம் நெருங்குகிறது. உண்மையான பிரச்சினையைப் பார்த்துக் கொண்டே 'நாளை எரிபொருள் இருக்காது, உணவு தட்டுப்பாடு ஏற்படும்' என்று பொய்யான மாயைகளை உருவாக்குகிறார்கள். இங்கு சில பிரச்சினைகள் சிலரின் நலனுக்காக – மக்களுக்குத் தெரியாமல் – உருவாக்கப்பட்டன" என்று உபதேசிக்கின்றார் அவர்.

குற்றங்களை, தவறுகளை ஒப்புக்கொள்ளாமல், வேண்டுமென்றே அடம் பிடித்து, அகங்காரம் கொண்டு மறுப்பதும், அதேசமயம் நடந்த தவறுகளுக்கான பொறுப்பை மற்றவர்கள் மீது மட்டும் சுமத்தி விட்டுத் தான் தப்பிப் பிழைக்க முயல்வதும் காந்திஜி சொன்னபடி பெரும் அவமானத்துக்குரியவைதான்.

பிரதமர் தமது உரையில் குறிப்பிட்டபடி கொவிட் தொற்று ஓர் இயற்கைப் பேரிடர். அதனால் ஏற்பட்ட கஷ்டங்கள், நஷ்டங்கள், இழப்புக்கள், பாதிப்புகளுக்கு அரசு உட்பட வேறு யார் மீதும் குற்றம் சுமத்துவது தவறாகும்.

ஆனால், இன்று நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பேரிடர் வெறும் கொவிட் தொற்றினால் மட்டும் ஏற்பட்டதல்ல. தவறான பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசியல் முடிவுகளினால் ஏற்பட்டது அது.

விவசாயப் பொருளாதாரம் குறித்து உரையாற்றிய பிரதமர், காலங்காலமாக அந்தப் பொருளாதாரத்தில் சுய நிறைவு கண்டு பெருமிதம் பெற்றிருந்த இலங்கை நாடு இன்று அந்தத் துறையில் அதலபாதாளத்துக்கு விழுந்தமைக்கு காரணம் யார், எந்த முடிவால் அது ஏற்பட்டது என்று ஒரு தடவை தம்மைத்தாமே கேட்டுப் பார்த்திருப்பாராயின் அவரது சொந்த அரசின் சுயரூபம் அவருக்கே தெரிந்திருக்கும்.

நாட்டில் அசேதன இரசாயனங்கள், உரங்கள், மருந்துகள் மற்றும் கிருமி நாசினிகளைத் திடீரென ஒரு போகத்துக்குள்ளேயே தடை செய்யும் சாத்தியமேயற்ற – பிழவாத – முடிவால்தான் நாட்டின் விவசாயிகள் வீதிக்கு வந்தார்கள். விளைநிலங்கள் வெறும் தரிசு நிலங்களாயின. சுய உற்பத்தி மக்களிடம் தொடர்ந்து இருந்திருந்தால் அவர்கள் இப்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஓரளவு முகம் கொடுத்து மீண்டெழுந்திருப்பார்கள். அப்படி முகம் கொடுக்க முடியாமல் அவர்களை முகம் குப்புற விழ வைத்தது விவசாயம் தொடர்பில் இந்த பிரதமரின் அரசுத் தலைவர் எடுத்த மேற்படி முட்டாள்தனமான – எதேச்சாதிகாரமான – அகங்கார – முடிவுதான்; பலரும் சரியான நிபுணத்துவ ஆலோசனைகள் கூறக் கூற, அவற்றை எல்லாம் நிராகரித்து, தமது முட்டாள்தனமான பிடிவாத முடிவை நடைமுறைப் படுத்துவதில் இராணுவத் தீவிரம் காட்டியமைதான்.

ஆக, இத்தகைய விவசாய, பொருளாதார, நிதி முகாமைத்துவ விடயங்களில் விட்ட பெரும் தவறுகளை ஒப்புக்கொள்ளாத தலைமகன் இருக்கும் வரை, நாடு அவற்றிலிருந்து மீளுவது துர்லபமே.

தீதும் நன்றும் பிறர் தர வாரா.

# 2029 ஆம் ஆண்டு வரை நெருக்கடியான சூழ்நிலை!

## அமைச்சர் பந்துல ஆரூடம்



அரசியல் போராட்டங்கள் ஊடாகப் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது. யார் ஆட்சி செய்தாலும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை 2029 ஆம் ஆண்டு வரை தொடரும் என்பதே உண்மை. நாட்டு மக்கள் யதார்த்த நிலைமையை விளங்கிக்கொள்ள வேண்டும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நிலைமை கைமீறி சென்ற காரணத்தால் அரச சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

பொருளாதார மற்றும் கடன் நெருக்கடியில் இருந்து மீள்வது தொடர்பாக சர்வதேச பொருளாதார நிபுணரின் ஆலோசனையைப் பெறுவதற்கு நால்வர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டமை வருமாறு – 'கொவிட் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளது. எரிபொருள், எரிவாயு, அத்தியாவசிய உணவு பொருள்கள் மற்றும் மருந்து பொருள்கள் இறக்குமதி சேவை துறையில் பாரிய நெருக்கடியைத் தற்போது எதிர்கொள்ள வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

வெளிநாட்டு கையிருப்பு வரையறுக்கப்பட்டதைத் தொடர்ந்து தீவிரமடைந்துள்ள பிரச்சினைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசையும், முற்பட்ட அரசையும் குற்றஞ்சாட்டுவது பொருத்தமற்றதாகும். கடன் பெற்று அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்யும் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றி வருகிறோம்.

பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் போராட்டங்களின் ஊடாக ஒருபோதும் தீர்வு காண முடியாது. யார் ஆட்சி செய்தாலும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை 2029ஆம் ஆண்டு வரை தொடரும் என்பதே உண்மை. நாட்டு மக்கள் தற்போதைய யதார்த்த நிலைமையை விளங்கிக்கொள்ள வேண்டும். புத்தாண்டு காலப்பகுதியில் அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைக்கவும், நிவாரணம் வழங்கவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. என்றார்.

# சந்தா பெறாத தொழிற்சங்கமாக தொழிலாளர் காங்கிரஸ் மாறும்!

## செந்தில் தொண்டமான் நம்பிக்கை



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சந்தா பெறாத தொழிற்சங்கமாக எதிர்காலத்தில் மாற்றியமைக்கப்படும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொட்டக்கலையில் நேற்று(புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், எமது மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலைமையில் இருந்து அவர்களை மீட்டெடுப்பது தொடர்பில் தேசிய சபையில் ஆராயப்பட்டது. எமது மக்களின் உரிமைகளுக்காகவும், பொருளாதார எழுச்சிக்காகவும் நாம் தொடர்ந்து தீவிரமாக செயற்படுவோம்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சந்தா பெறாத சங்கமாக மாறவேண்டும் என்பதே மறைந்த தலைவரின் இலட்சியமும்கூட.

அதனை நாம் நிறைவேற்றுவோம். தற்போது சந்தா பெற்றாலும் கணக்கு விவரம் உரியவகையில் காண்பிக்கப்படுகின்றது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# உணவுகளை நுகர்வோர் 50 சதவீதத்தால் வீழ்ச்சி!

உணவுப் பொருள்களுக்கான விலை அதிகரித்தமையை அடுத்து உணவுகளை நுகர்வோரின் எண்ணிக்கை 50 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மின்சார துண்டிப்பும் இந்த விடயத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# முதல் தடவையாக 2 லட்சத்தை அடைந்தது தங்கத்தின் விலை!

நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 2 லட்சம் ரூபாவைத் தாண்டியுள்ளது. கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள தங்க நகைக் கடைகளில் இந்த விலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளமையுடன், 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபாவைத் தாண்டியுள்ளது.

செட்டியார் தெருவில் உள்ள தங்க நகைக் கடைகளுடன் தொடர்புடைய தங்கத்துக்கும் தட்டுப்பாடு உள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

# பேச வாருங்கள் என ஆர்ப்பாட்டம் செய்து விட்டு பேச அழைக்கும் போது வரமாட்டோம் எனலாமா?

## மட்டக்களப்பு ஊடக சந்திப்பில் சுமந்திரன் எம்.பி. கேள்வி



அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்களும் ஜனாதிபதி எங்களுடன் பேசவரவேண்டும் என்றே ஆர்ப்பாட்டம் செய்தோம். பேசவாருங்கள் என்று ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு, அவர் பேச்சுக்குத் திகதி கொடுக்கும் போது பேச மாட்டோம் என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கின்றது? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வியெழுப்பினார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

மேற்படி ஊடக சந்திப்பில் சுமந்திரன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், எங்களுடன் நடத்திய உரையாடலிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடந்த பேச்சு சம்பந்தமாக பேசினார்.

இது சம்பந்தமாக எங்களுக்கு முன்னர் தாம் ஜனாதிபதியைச் சந்தித்தார் எனவும், நாங்கள் தெரிவித்த விடயங்களையே ஜனாதிபதி ஏற்கெனவே சொல்லியிருக்கின்றார் எனவும், உடனடிப் பிரச்சினை தொடர்பான விடயங்கள் சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் இணக்கப்பாடு அல்லது வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று இந்தியாவுக்கு ஜனாதிபதி உறுதியளித்தார் எனவும் எங்களுக்குத் தெரியப்படுத்தினார். உடனடிவிடயங்களில் நீண்டகாலத் தமிழ் அரசியற் கைதிகளின் விடுவிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நில அபகரிப்பு தொடர்பில் நீண்ட பேச்சு நடத்தினோம். வெவ்வேறு சட்டங்களின் அடிப்படையில் எமது நிலங்கள் அபகரிக்கப்படுகின்றமையை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு அவர்கள் இணங்கினார்கள்.

அதற்கப்பால் நிர்வாக எல்லைகளை மாற்றுகின்ற முயற்சி நடைபெறுகின்றது. அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதற்கான அறிவிப்பைத் தாம் உடனடியாக வழங்குவார் என ஜனாதிபதி தெரிவித்தார். இராணுவத் தேவைக்காகப் புதிய சுவீகரிப்புகள் செய்யப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டது.

அத்துடன், போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கென்று ஒரு விசேட அபிவிருத்தி நிதியமொன்று உருவாக்குவதற்கு அரசாங்கம் இணங்கியிருக்கின்றது. அது எவ்வாறு என்ற விடயங்கள் இன்னும் பேசப்படவில்லை. இது தொடர்பில் எதிர்வரும் காலங்களில் பேசி முதலீட்டாளர்களை எவ்வாறு வருவிப்பது என்பது தொடர்பிலும் கலந்துரையாடுவோம்.

இதற்கு மேலதிகமாக நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்து ஆராயும் முகமாக அனைத்துக் கட்சிகள் தொடர்பான கூட்டமொன்றும் நடைபெற்றது. பல எதிர்க்கட்சிகள் அதனைப் பகிஷ்கரித்தன. அரசாங்கத்தில் இருக்கும் இரு கட்சிகள் கூட இதனைப் பகிஷ்கரித்தன.

ஆனால், இது அரசாங்கத்தைப் பொறுத்த ஒரு விடயம் அல்ல. முழு நாட்டையும் மக்களையும் மிக மோசமாகப் பாதிக்கும் ஒரு விடயம். அந்த விடயத்தை அரசாங்கம் பார்த்துக் கொள்ளட்டும் என்று கூறி இருக்க முடியாது. பொறுப்பான ஓர் அரசியற் கட்சியாக – மக்கள் பிரதிநிதிகளாக – இந்த விடயம் குறித்தும் அரசாங்கத்தோடு பேச வேண்டிய அத்தியாவசியத் தேவை எமக்கும் இருந்தது.

எனவே, நாங்கள் அதில் கலந்து கொண்டு, எங்கள் முன்மொழிவுகளை, சிபாரிசுகளைச் சொல்லியிருக்கின்றோம். – என்றார்.




## தாய் – சேய் பராமரிப்பு நிலையம் மூதூரில் நிர்மாணித்து கையளிப்பு

(ஹஸ்பர்)

திருகோணமலை, மூதூர் சுகாதார பிரிவிற்கு உட்பட்ட கேணிக்காடு பகுதியில் துபாய் நாட்டைச் சேர்ந்த அகீல் அவர்களினால் சட்டத்தரணி எம்.எல்.பஜாத் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க நிர்மாணிக்கப்பட்ட தாய் – சேய் பராமரிப்பு நிலையம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஹில்மி முகைதீன் பாவாவிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச சபை தவிசாளர் அரூஸ், தோப்பூர் வைத்தியசாலை வைத்தியர் மருத்துவர் கஸ்ஸாலி, மருத்துவர் அஞ்சலி. வட்டார உறுப்பினர் பஃஜித், பாடசாலை அதிபர்களான ரஸீன் ,ஹில்மி, கிராமிய அபிவிருத்திச் சங்கத் தலைவர் மனாஸிர், பிரதேச அபிவிருத்தி அதிகாரி, மூதூர் சுகாதார பணிமனை உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள். ஆசிரியர்கள், உலமாக்கள், பிரதேசவாசிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சாய்ந்தமருது விஞ்ஞான ஆசிரியரின் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



விஞ்ஞானப் பாடத்தை இலகு முறையில் கற்றுக் கொள்கின்ற வகையில் சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆசிரியர் எம்.எம்.எம்.உவைஸ் எழுதிய மூன்று விஞ்ஞான நூல்களின் வெளியீடு, நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கற்பித்தலில் சுமார் 20 வருட அனுபவம் கொண்ட இவர் எழுதிய விஞ்ஞான வினா – விடை தொகுப்பு அடங்கிய விஞ்ஞான தேனருவி தரம் – 06, விஞ்ஞான தேன் கிண்ணம் தரம் – 07, விஞ்ஞான தேன் கிண்ணம் தரம் – 09 ஆகிய 03 நூல்களே வெளியிடப்பட்டன.

பாடசாலை ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலையின் பிரதி அதிபர் ஏ.எம். நிசார் தலைமையில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ. மலிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன், சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். அதிபர் எம்.ஐ. இல்லியாஸ், கல்முனை அல்–ஸுஹறா அதிபர் எம்.எச்.எஸ்.ஆர். மஜீதிய்யா, அல் – ஜலால் வித்தியாலய பிரதி அதிபர் டி.கே.எம். சிராஜ், லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் பிரதி அதிபர் எஸ்.எம்.சுஜான், ஆசிரியர் ஏ. ஷியாம் ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாகவும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்) எம்.எஸ். சஹ்துல் அமீன் விசேட அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர். பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.





## சிறப்புச் சேவையாற்றியோருக்கு காரைதீவில் கௌரவிப்பு நிகழ்வு

(நூருள் ஹுதா உமர்)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் 2021 ஆம் ஆண்டில் சிறப்பாக சேவையாற்றிய உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வும், 2022 ஆம் ஆண்டுக்கான பயிற்சி கருத்தரங்கும் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜனினால் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச ரீதியில் இலக்கினை அடைந்து கொண்ட உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வை தொடர்ந்து அம்பாறை மாவட்ட இணைப்பதிகாரியினால் கருத்தரங்கும் நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலக கிராம நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், சமூகசேவை உத்தியோகத்தர்கள், அம்பாறை மாவட்ட இணைப்பதிகாரி, விடய பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பேரறிவாளன் விடயம் மட்டுமா ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது? நளினி வழக்கில் தமிழக அரசு விளக்கமளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு





முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளாக உள்ள நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய எழுவரையும் விடுதலை செய்வது தொடர்பாக அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆயினும், அதுதொடர்பாக ஆளுநர் தனது தீர்மானத்தை அறிவிக்காத நிலையில் அந்த விவகாரம் இழுபறியாகியுள்ளது. இதற்கிடையில் அண்மையில் பேரறிவாளனுக்கு பிணை வழங்கப்பட்டது.

இந்த நிலையில், தன்னை முன்கூட்டி விடுதலை செய்ய வேண்டும் என நளினி சென்னை உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு, தலைமை நீதிபதி முனீஸ்வர் நாத் பண்டாரி, நீதிபதி பரத சக்ரவர்த்தி அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, நளினி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் நளினியை தொடர்ந்து சிறையில் அடைத்திருக்கின்றமை சட்டவிரோதம், என்று வாதிட்டார். அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், ஆளுநருக்கு எதிராக உத்தரவிடும்படி கோர முடியாது. ஏற்கனவே மூன்று வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கை எப்படி ஏற்க முடியும்? தீர்மானத்தின் மீது ஆளுநர் எந்த முடிவும் எடுக்காத நிலையில் என்ன உத்தரவைப் பிறப்பிக்க முடியும்? ஆளுநர் ஒப்புதல் இல்லாமல் ஆயுள் கைதியை எப்படி முன்கூட்டி விடுதலை செய்ய முடியும்? என்று கேள்விகளை எழுப்பினார்.

பின்னர், முன்கூட்டி விடுதலை செய்ய நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், பேரறிவாளன் விவகாரம் மட்டும் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டதா? அல்லது ஏழு பேரின் வழக்குகளும் அனுப்பப்பட்டுள்ளனவா? என விளக்கம் அளிக்க தமிழக அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். இந்த வழக்கின் விசாரணையை அடுத்த வாரத்துக்கு அவர்கள் ஒத்திவைத்தனர்.

# இலங்கையில் ஏற்பட்டுள்ள பஞ்சம் இந்தியாவுக்கும் வர வாய்ப்புள்ளதாக சீமான் எச்சரிக்கை விடுப்பு



2015 ஆம் ஆண்டு திருச்சி எடமலைப்பட்டி புதூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தமிழக அரசை விமர்சித்து பேசியது தொடர்பாக தொடர்ந்த அவதூறு வழக்கில் ஆஜராவதற்காக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று திருச்சிக்குச் சென்றிருந்தார். பின்னர் திருச்சி நீதின்ற வளாகத்தில் உள்ள குற்றவியல் நீதிமன்றம் எண் 2இல் அவர் ஆஜரானார். இந்த வழக்கில் மீண்டும் அவரை ஏப்ரல் 21ஆம் திகதி ஆஜராக வேண்டுமென நீதிபதி திரிவேணி உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து நீதிமன்றத்துக்கு வெளியே சீமான் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர்,

நீட் தேர்வை ரத்துச் செய்வது தொடர்பாக ஜனாதிபதியை தமிழக முதல்வர் சந்திப்பது நல்ல விடயம்தான். நீட் தேர்வை ரத்துச்செய்வது தொடர்பாக மாநாடு ஒன்றைக் கூட நடத்தலாம்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ளநிலைபொருளாதாரச் சரிவு அல்ல பஞ்சம். இதே நிலைதான் நமக்கும் அடுத்த இரண்டு ஆண்டுகளில் வரும் என்பதை மனதில் வைத்துக் கொள்ளவும். ஏனென்றால் நம்முடைய பொருளாதாரக் கொள்கை அப்படி உள்ளது. அனைத்தையும் தனியாருக்கு தாரை வார்த்துக்கொடுத்தால் நிலைமை அப்படித்தான் ஆகும், என்று கூறியிருக்கிறார்.



## 3,887 கோடி ரூபாவில் போர் ஹெலிக்கொப்டர்கள் வாங்குவதற்கு இந்திய பாதுகாப்பு அமைச்சரவை முடிவு

இந்தியப் பிரதமர் மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு கூட்டத்தில் 3,887 கோடி ரூபா செலவில் உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட 15 இலகுரக போர் ஹெக் கொப்டர்களை வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்படட்து. இவற்றில் விமானப் படைக்கு 10, தரைப் படைக்கு 5 ஹெலிக்காப்டர்கள் வழங் கப்படும் என பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்திய மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இந்துஸ்தான் ஏரோ னொட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனம் இந்த ஹெலிகொப்டர்களைத் தயாரிக்கிறது.

சீனாவுடனான எல்லைப் பிரச்சினை உட்பட பல்வேறு பாதுகாப்பு சவால்களை இந்தியா எதிர்கொண்டு வருவதைக் கருத்தில் கொண்டு, ஒட்டுமொத்த திறன்களையும் மேம்படுத்துவதில் முப்படைகள் கவனம் செலுத்தி வரும் நிலையில், ஹெலிகொப்டர்களை வாங்குவதற்கான முடிவு எடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# டெல்லி முதல்வரின் வீட்டை தாக்கிய பா.ஜ.கவினர் கெஜ்ரிவால் உயிருக்கு ஆபத்து என்கிறார் சிசோடியா



காஷ்மீர் படுகொலை தொடர்பாக டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கூறிய கருத்திற்கு பா.ஜ.க.வினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். காஷ்மீர் பைல்ஸ் படத்தை பா.ஜ.க. விளம்பரப்படுத்துவதாகவும் கெஜரிவால் சட்டசபையில் கடுமையாக சாடியிருந்தார்.

இந்தநிலையில், கெஜ்ரிவால் வீட்டின் முன்பாக பா.ஜ.கவின் அடையாளங்களைத் தரித்த சிலர் வந்து வீட்டின் மீது தாக்குதல் நடத்தினர். காவல் துறைப் பாதுகாப்பையும் மீறி நடந்த இந்தச் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதுபற்றி டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா கூறுகையில், முதல்வர் கெஜ்ரி வாலை கொல்வதற்கு பா.ஜ.க. சதி செய்வதாக குற்றஞ் சாட்டியுள்ளார்.

டெல்லி பொலிஸார் முன்னிலையில், சில டெல்லி பொலிஸாருடன் இணைந்தே பா.ஜ.க. குண்டர்கள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் வீட்டிற்கு வந்துள்ளனர். முதல்வரின் வீட்டைச் சுற்றிலும் இருக்கும் கண்காணிப்பு கமராக்கள் உடைக்கப்பட்டன. பாதுகாப்புச் சுவர் உடைக்கப் பட்டிருக்கிறது. இதையெல்லாம் டெல்லி பொலிஸார் முன்னிலையிலேயே பா.ஜ.க. குண்டர்கள் நடத்தியுள்ளனர், என்று சிசோடியா சாடியிருக்கிறார்.

## பொது நுழைவுத்தேர்வை கண்டித்து திருவாரூரில் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம் என வைகோ அறிவிப்பு



நாட்டில் உள்ள மத்திய பல்கலைக் கழகங்களில் இளநிலைப் படிப்புகளில் சேருவதற்கு ஜூலை மாதம் பொது நுழைவுத் தேர்வு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக ம.தி.மு.க. பொதுச்செயலாளரும் மாநிலங்களவை எம்.பியுமான வைகோ அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் உள்ள 45 மத்திய பல்கலைக்கழகங்களில் இளநிலைப் படிப்புகளில் சேருவதற்கு 12 ஆம் வகுப்பு மதிப்பெண் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது,

பொது நுழைவுத்தேர்வு மூலம் மாண வர் சேர்க்கை நடத்தப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

மற்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் கல்லூரிகள் பொது நுழைவுத்தேர்வை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் மாநில கல்வி முறையை நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கையில் மத்திய அரசு இறங்கியுள்ளது.

இதைக் கண்டித்து, தமிழகத்தில் மத்திய பல்கலைக்கழகம் அமைந்துள்ள திருவாரூரில் ம.தி.மு.க. இளைஞரணி சார்பில் ஏப்ரல் 7ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெறும், என்று வைகோ தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்று ஊடாக அரசை தோற்கடித்து சிறந்த ஆட்சியை அமைக்க விமல் அழைப்பு!



நாடாளுமன்றத்தின் ஊடாக அரசாங்கத்தைவீழ்த்தி சிறந்த அரசை ஸ்தாபிக்க அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்.

உயிரற்ற சடலம் போல் அரசாங்கம் உணர்வற்றதாக உள்ளது. 'மூடர்களே வெளியேறுங்கள்' என நாட்டு மக்கள் அரசாங்கத்தை விமர்சிக்க வேண்டும்.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவிற்கு அச்சம் இருப்பதால் அவர் எண்ணம் போல் நாணயம் அச்சிடுவார் என முன்னாள் கைத்தொழில்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கோட்டை ஸ்ரீ கல்யாணி தர்ம சங்க சபையின் மகாநாயக்கர் இத்தபானே தர்மலங்கார தேரரை சந்தித்து அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடியதன் பின்னர் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாடு மிகமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்க்கொண்டுள்ளார்கள். மக்கள் எதிர்க்கொண்டுள்ள பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தாமல் உயிரற்ற சடலத்தை போன்று உணர்வில்லாமல் இருக்கிறது.

நாடாளுமன்றின் ஊடாக அரசாங்கத்தை வீழ்த்தி சிறந்த அரசை ஸ்தாபிக்க அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். நாடு எதிர்க்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு பலம் வாய்ந்த நாடுகள் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள உரிய திட்டங்களை செயற்படுத்தியுள்ளன என்பதை அரசாங்கத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரும் நன்கு அறிவார்கள்.

தற்போதைய நெருக்கடி நிலைமைக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. கடந்த அரசாங்கம் ஏற்படுத்திய நெருக்கடி தான் பொறுப்புக்கூற வேண்டிய தேவையில்லை என அரச தலைவர் குறிப்பிட முடியாது. பொறுப்புக்களைத் தட்டிக்கழிப்பதற்காக மக்கள் அரச தலைவர்களைத் தெரிவு செய்யவில்லை.

அரசாங்கத்தின் மீது மக்களின் நம்பிக்கை முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுவிட்டது. மூடர்களே வெளியேறுங்கள் என நாட்டு மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக ஒன்றிணைந்து போராட வேண்டும். மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் அதிகாரம் அரசியல்வாதிகளுக்கும், ஆள்பவர்களுக்கும் கிடையாது.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவிற்கு சொந்தமான அச்சகம் உள்ளதால் அவர் எண்ணம் போல் நாணயம் அச்சிடுவார். பண வீக்கம் தீவிரமடைவதால் ஏற்படும் பாதிப்பு அவருக்கு தாக்கம் செலுத்தாது. நாட்டு மக்கள் நடப்பு நிலைவரங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும். – என்றார்.

# தங்கள் கைகளைத் தாங்களே வெட்டிக்கொள்ளும் மாணவர்கள்

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் சுமார் 20 மாணவர்கள் பிளேட்டினால் தங்களது கைகளை தாங்களே வெட்டிக் கொண்டுள்ளனர் என சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாள்களுக்கு முன் தரம் ஒன்பதில் கல்வி பயிலும் மாணவர்கள் பலர் பிளேட்டினால் தங்களது கைகளை தாங்களே வெட்டியுள்ளனர்.

பின்னர் குருதியைக் கடதாசி மூலம் துடைத்துவிட்டு கிருமி தொற்று நீக்கி திரவத்தை (சானிடைசர்) காயத்தின் மேல் தெளித்து கொண்டனர் என நேரில் பார்த்த சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை அந்த மாணவர்கள் சாதாரணமாக செய்து கொள்கின்றனர் எனவும், ஒருவருக்கு ஒருவர் பார்த்து வெட்டிக்கொண்டதன் மூலமே வெட்டியவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாகவும் சக மாணவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

கோபத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் ஓரிரு மாணவர்கள் செய்வதைப் பார்த்து ஏனைய மாணவர்களும் இவ்வாறு செய்து கொண்டனர் எனவும், கட்டிளம் பருவத்தில் மாணவர்கள் இது போன்ற ஹீரோயிசம் எனும் போர்வையில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் எனவும் உளநல வைத்தியர் ம. ஜெயராசா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைகளில் வெட்டிக்கொள்ளும் மாணவர்கள் அனைவரும் கட்டாயம் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான மாணவர்கள் அல்லர் எனவும் குறிப்பிட்டார்.

அத்தோடு கைகளை வெட்டிக் கொள்ளும் மாணவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகள் நிறைவுற்று வேலைவாய்ப்புக்களுக்காக முக்கியமாக பொலிஸ், நீதித்துறை மற்றும் இராணுவம் உள்ளிட்ட பல தொழில் துறைகளுக்கு நேர்முகத் தேர்வுகளுக்குச் செல்லும்போது பெரும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே இம் மாணவர்களுக்கு தாங்கள் உளவியல் ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கவுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# மஹோற்சவம் நாளை ஆரம்பம்

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்களில் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும், 11ஆம் திகதி கைலாசவாகனத் திருவிழாவும், 13ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 15ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. உற்சவ காலங்களில் தினமும் மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும்.

# எரிபொருள் தாங்கிய கப்பல் நாடு வந்தது!

எரிபொருளை தாங்கிய மற்றுமொரு கப்பல் இன்று (வியாழக்கிழமை) இலங்கையை வந்தடையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கடன் எல்லை வசதியின் கீழ், எரிபொருளை தாங்கிய 4 ஆவது கப்பல் இவ்வாறு நாட்டை வந்தடையவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

# மக்களுக்குப் பிரச்சினை வரும்போது நாம் மௌனம் காத்தமை கிடையாது!

## ரமேஷ்வரன் திட்டவட்டம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அரச பங்காளிக்கட்சியாக இருந்தாலும் – எமது மக்களுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் ஒருபோதும் மௌனம் காத்தமை கிடையாது என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நிதி செயலாளருமான மருதபாண்டி ரமேஷ்வரன் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபைக் கூட்டம் நேற்று (புதன்கிழமை) கொட்டகலையிலுள்ள சி.எல்.எவ். வளாகத்தில் நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்–

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் புதிய உறுப்பினர்கள் புதிதாக பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது எமக்கு ஓர் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அரச பங்காளிக்கட்சியாக இருந்தாலும் – எமது மக்களுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் ஒருபோதும் மௌனம் காத்தமை கிடையாது. எனவே, காங்கிரஸை நம்புங்கள். அந்த அமைப்பு உங்களை ஒருபோதும் கைவிடாது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வளர்ச்சிக்கு பலர் அளப் பரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். காங்கிரஸில் இளைஞர்கள் மற்றும் பெண்கள் அதிகளவு அங்கத்தவர்களாக உள்ளனர். இம்முறை தேசிய சபையில் இளைஞர்களும், பெண்களும் முன்னுரிமை வழங்கப்பட்டு பதவிகள் வழங்கப்பட்டன.

காங்கிரஸுக்கு சோதனை வந்த காலகட்டங்களில் எல்லாம் நீங்கள் எமக்குப் பக்க பலமாக இருந்துள்ளீர்கள். இனியும் இருப்பீர்கள். நாமும் உங்களைக் கைவிடமாட்டோம்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது, விலைவாசி உயர்ந்துள்ளது.

இவைபற்றிகாங்கிரஸ்கதைப்பதில்லை என சிலர் விமர்சிக்கின்றனர். நாம் அரச பங்காளிகளாக இருந்தாலும், மக்களுக்கு பிரச்சினை என்றால் மௌனம் காக்கமாட்டோம். – என்றார்.

# தேவையான மருந்துகளை தொடர்ச்சியாக வழங்குமாறு உலக வங்கியிடம் கோரிக்கை

இலங்கைக்கு தேவையான மருந்துகளை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்வதற்காக ஒத்துழைப்பு வழங்குமாறு இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன உலக வங்கியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உலக வங்கியின் தெற்காசிய வலயம் தொடர்பான பணிப்பாளர் லினோ ஷேர்பன் பென்ஸ் உள்ளிட்ட விசேட பிரதிநிதிகளை நேற்று (புதன்கிழமை) சந்தித்து பேசிய போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாட்டுக்கு முன்னுரிமை அடிப்படையில் மருந்துகளை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்போம் என உலக வங்கியின் பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்தனர்.

அத்துடன், இலங்கையில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் வெற்றிகரமாக இடம்பெறுவதை உலக வங்கியின் தெற்காசிய வலய பணிப்பாளர் வரவேற்றுள்ளார்.

# கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு காலியில் ஒருவர் பரிதாப கொலை!

காலி – மீடியாகொட பொலிஸ் பிரிவில் மெததுவ – குலீகொட பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குலீகொட பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட நபரும், கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களும் அயல் வீட்டவர்கள் என்பதோடு, கொலைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

அத்தோடு சந்தேகநபர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மீடியாகொட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.03.2022இல் வெளியிடப்பெற்றது.